செ.வெ.எண்: 22 நாள். 08 .12.2017

## பத்திரிக்கைச் செய்தி

01.01.2018-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறையில் திருத்தம் செய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்திரவிட்டுள்ளதின் பேரில் சிறப்பு சுருக்க முறை திருத்தம் மேற்கொள்வதற்கு 03.10.2017 முதல் 30.1.2017 வரை வழங்கப்பட்ட கால அவகாசத்தினை தற்போது 15.12.2017 வரை நீடித்து உத்தரவிடப்பட்டுள்ளது. 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் அதாவது 31.12.1999 வரை பிறந்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரினை புதிதாக சேர்த்திட படிவம் 6 மனு அளிக்கலாம். புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6, பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, பெயர் மற்றும் இதர திருத்தங்கள் செய்திட படிவம் 8, ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்திட படிவம் 8ஏ மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் பெயர் சேர்க்க படிவம் 6ஏல் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், சிறப்பு சுருக்க திருத்தம் சிறப்பு இயக்கம் 2018 திட்டத்தின் கீழ் அனைத்து சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் 15.11.2017 முதல் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர்கள் வசிக்கும் இடத்திற்கு வீடு வீடாக சென்று விடுபட்ட நபர்களிடம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6, வாக்காளர் பட்டியலில் இறந்த வாக்காளர்கள் பெயரை நீக்கிட, ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் பதிவுகள் உள்ள வாக்காளர்களை கண்டறிதல் மற்றும் நிரந்தரமாக குடும்பத்துடன் இடம் பெயர்ந்து சென்றவர்கள் குறித்து அறிந்து வாக்காளர் பட்டியலை திருத்தம் மேற்கொண்டு வருகிறார்கள். இந்த பணியினையும் 15.12.2017 வரை நீட்டித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக வருகை தரும் போது தங்கள் குடும்பத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களின் விபரம், அனைத்து குடும்ப உறுப்பினர்களின் வாக்காளர் அடையாள அட்டை எண் மின்அஞ்சல் முகவரி, அலைபேசி எண் 01.01.2019, 01.01.2020 மற்றும் 01.01.2021-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியாகும் நபர்கள் குறித்தும் விபரங்கள் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த சிறப்பு இயக்கத்தின் போது வீடு வீடாக வருகை தரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு தேவையாக விபரங்களை வழங்கி தக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து வாக்காளர்கள், பொதுமக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.